செ.வெ. எண்: 441 நாள்: 26-07-2012

**பத்திரிக்கை செய்தி**

மத்திய அரசின், சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கும் அமைச்சகம் மூலம் மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வுக்கென சிறப்பாக செயல்பட்டு வரும் தொண்டு நிறுவனங்கள், தனிநபர்கள், மாற்றுத்திறனுடைய பணியாளர்கள் ஆகியோருக்கு தேசிய விருதுகள் 3.12.2012 அன்று புதுடெல்லியில் வழங்கப்படுகிறது. மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வுக்கான 1 தேசிய விருதுகள் கீழ்க்குறிப்பிட்ட பிரிவுகளில் வழங்க தகுந்த நபர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. சிறந்த மாற்றுத் திறனாளி பணியாளர்கள்/சுயதொழில் புரியும் மாற்றுத் திறனுடைய நபர்கள் (Best Employees / Self Employed with disabilities),
2. மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகளவில் வேலைவாய்ப்பு வழங்கிய சிறந்த தனியார் தொழிலதிபர், மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகளவில் வேலை வாய்ப்பு பெற்றுத் தந்த பணியமர்த்தும் அலுவலர் அல்லது நிறுவனங்கள், (Best Employers and Placement Officer/ Agency)
3. மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக சேவை செய்து வரும் தனி நபர்/ நிறுவனங்கள் (Best Individual including Professional and Best Institution working for the cause of persons with disabilities),
4. மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னோடியாகத் திகழ்பவர்கள், (Best Role Model Awards)
5. மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் வகையிலான உதவி உபகரணங்களை சிறந்த தொழில் நுட்பத்துடன் வடிவமைத்தவர்கள் ( Best Applied Research / Innovation / Product Development aimed at improving the life of persons with disabilities
6. மாற்றுத் திறனுடையோருக்கு தடையற்ற சூழ்நிலையை ஏற்படுத்திய நிறுவனங்கள் (Outstanding Work in Creation of Barrier Free Environment for the Persons with Disabilities)
7. மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக சேவை செய்த மாவட்டம் (Best District in providing Rehabilitation Services)

8. தேசியஅறக் கட்டளையின் சிறந்த உள்ளூர் அளவிலான குழுக்கள் (Best Local Level Committee of the National Trust for Welfare of Persons with Autism, Cerebral Palsy, Mental Retardation and Multiple Disabilities)

9. தேசிய மாற்றுத் திறனுடையோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக திட்டத்தினை செயல்படுத்தும் மாநில அளவிலான முறைப்படுத்தும் நிறுவனங்கள் (Best State Channelising Agency of the National Handicapped Finance and Development Corporation)

10. சிறந்த தனியான ஆக்கத் திறன் வாய்ந்த மாற்றுத் திறனுடைய நபர்கள் (Best Creative Adult Persons with disabilities)

11. சிறந்த தனியான ஆக்கத் திறன் வாய்ந்த மாற்றுத் திறனுடைய குழந்தைகள் (Best Creative Child disabilities)

12. சிறந்த பிரெய்லி அச்சகம் (Best Braille Press)

13. சிறந்த மாற்றுத் திறனாளிகள் அணுகக்கூடிய இணையதளம் ( Best Accessible Website)

ஆகிய பிரிவுகளில் தேசிய விருதுகள் பெற விண்ணப்பிக்கலாம்,

மேற்குறிப்பிடப்பட்ட பிரிவுகளில் விண்ணப்பிக்க விரும்பும் நபர்கள்/நிறுவனங்கள் இதற்கான படிவங்களை { HYPERLINK "http://www.socialjustice.nic.in" } Scheme of National Awards 2012 என்ற இணையதளத்தில் இருந்து கீழிறக்கம் செய்து கொள்ளலாம், அல்லது சம்பந்தப்பட்ட மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம் அல்லது மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அலுவலகம், கே.கே. நகர், சென்னை 78 ஆகியவற்றிலிருந்து பெற்று தக்க இணைப்புகளுடன் வருகிற **3.8.2012க்குள்** மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் அவர்களின் பரிந்துரையுடன் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், கே.கே. நகர், சென்னை 600 078 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

முதன்மைச் செயலாளர் /
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**

**செ.வெ. எண்: 441** **நாள்: 26–07–2012**